மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது குறித்த விவரங்களை கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் இந்தத் துறையினரும், இயக்குநரும் கவனிப்பார்கள்.

Over-bridge near Kumbakonam Railway station

* 40 Q.—Thiru N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is a proposal to construct an over-bridge at the level-crossing on the Kumbakonam-Karaikkal road, on the eastern side of Kumbakonam Railway Station; and

(b) if so, when it will be taken up for execution?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம், அந்தச் சாலையின் மைல் 0/7-ல் மேல் பாலம் கட்டுவதற்கான திட்டம், நான்காம் ஐந்தாண்டுத் திட்டச் செயற்குறிப்புகளில் சேர்க்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) திட்டத்தில் இப்பணி சேர்க்கப்பட்ட பின்னர், வரிசை முறைப்படியும் நிதிவசதி கிடைப்பதைப் பொறுத்தும் இவ்வேலை மேற்கொள்ளப்படும்.

Thiru K. VINAYAKAM : What is the estimate for this project?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்னும் அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்படவில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: சார் இப்படிப்பட்ட வேலைகளுக்கு எல்லாம் இந்திய சர்க்காரில் இருந்து பூராவும் மானியமாக வருகிறதா? அல்லது நமது சர்க்காரும் ஓரளவுக்கு அந்தச் செலவை ஒத்துக்கொள்ளவேண்டுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசிய நெடுஞ்சாலைகளில் இந்த வேலை அமைந்தால் அதற்காகும் செலவில் பாதியை நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பாதித்தொகையை மத்திய சர்க்கார் அளிக்கிறது.

நல்லம்பாக்கத்தில் புதிய ஏரி

* 41 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நகர் கிராமத்தைச் சேர்ந்த நல்லம்பாக்கத்திற்கு ஓர் புதிய ஏரி கட்டிக்கொடுக்க கோரி 19—3—1966-ஆம் தேதியில் மேற்படியூர் பஞ்சாயத்து தலைவர் மூலமாக மகசர் மனு ஒன்று நீர்ப்பாசன அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

1968 பிப்பிரவரி 15]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) நல்லம்பாக்கம் கிராமத்திலுள்ள பழைய ஏரி ஒன்றைப் புதுப்பிக்க வேண்டுமென்று தென் ஆர்க்காடு மாவட்டம், நல்லம்பாக்கம் உழவர்களிடமிருந்து பொதுப் பணித்துறை அமைச்சருக்கு 1966, மே மாதத்தில் முறையீடு ஒன்று வந்தது.

(இ) விரிவான புலனாய்வுக்காக இவ்வேலைத்திட்டத்தை எடுத்துக்கொள்ளுமாறு மேற்பார்வைப் பொறியாளர் உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன். ஏரியை அமைத்துக் கொடுப்பதற்கு எத்தனை ஆயிரம் ரூபாய் மதிப்புப் போட்டிருக்கிறார்கள்? அமைச்சர் அவர்கள் சொல்கிற பதில் ஒருவகையில் இருக்கிறது, ஆனால் அங்கு இருக்கிற நிலைமை ஒன்றும் அப்படி இருப்பதாகத் தெரியவில்லையே.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதன்மூலம் 75 ஏக்கரா பாசன வசதிபெறும் என்பதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது நடைபெற்றிருக்கிற ஆராய்ச்சிக் குறிப்பில இருந்து நமக்குத் தெரியவருவது 25 ஏக்கராதான் பாசனவசதி பெறமுடியும் என்பதாகும். ஆகவே, அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்படவேண்டுமா என்ற கேள்வி இருந்தும் தொடர்ந்து பரிசிலனை நடைபெறுகிறது.

உர விநியோகம்

*42. வின.—**திரு. எஸ். ஜே. ராமசாமி**: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் நமது மாநிலத்திற்கு விவசாயிகளுக்குத் தேவையான அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளை கோரி பெறப்பட்ட டன்கள் எவ்வளவு?

(இ) அப்படி வாங்கியிருந்தால் இந்த ஆண்டில் மேற்படி ரசாயன உரங்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுவிடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: 1967-68-ஆம் ஆண்டில் நமது உறுதியான தேவை அமோனியம் சல்பேட் அளவில் 8·15 லட்சம் டன்னாகும். 23—3—1967, தேதியிட்ட கடிதத்தில் இந்திய சர்க்கார் இம்மாநிலத்திற்கு 1967-68-ம் ஆண்டில் 4·15 லட்சம் டன் (அமோனியம் சல்பேட் அளவில்) ஒதுக்குவதாக குறிப்பிட்டிருந்தனர். ஆனால் பிற்பாடு அதை 5·20 லட்சம் டன்னாக (அம்மோனியம் சல்பேட் அளவில்) உயர்த்தினர். எனினும் இவ்வாண்டிற்கு அவர்கள் ஒதுக்கியிருக்கும் அளவு நம்முடைய உறுதியான உரத்தேவைக்கு குறைவாகவே இருப்பதால் இம்மாநிலத்தில் உரம் வழங்கப்படுவதில் ஓரளவுக்கு பற்றாக்குறை இருக்கும்.